# இத்தாலி பிரதமருடன் பிரதமர் பேச்சு

ஏப்ரல் 25, 2024

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இத்தாலி பிரதமர் ஸ்ரீமதி. ஜார்ஜியா மெலோனியுடன் இன்று தொலைபேசியில் உரையாடினார் .

2. விடுதலை தினத்தின் 79வது ஆண்டு நிறைவை முன்னிட்டு, பிரதமர் மெலோனி மற்றும் இத்தாலி மக்களுக்கு பிரதமர் தனது வாழ்த்துகளை தெரிவித்தார் .

3. ஜூன் 2024 இல் இத்தாலியின் புக்லியாவில் நடைபெறவிருக்கும் G7 உச்சி மாநாடு அவுட்ரீச் அமர்வுகளுக்கு பங்கேற்க அழைப்பு விடுத்ததற்காக பிரதமர் மெலோனிக்கு அவர் நன்றி தெரிவித்தார். இத்தாலியின் பிரசிடென்சியின் கீழ் G7 உச்சிமாநாட்டில் இந்தியாவின் G20 தலைமையின் முக்கிய முடிவுகளை, குறிப்பாக உலகளாவிய தெற்கு நாடுகளுக்கு ஆதரவு அளிப்பது குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர்.

4. இருதரப்பு மூலோபாய கூட்டாண்மையை தொடர்ந்து வலுப்படுத்துவதற்கான தங்கள் உறுதிப்பாட்டை அவர்கள் மீண்டும் உறுதிப்படுத்தினர்.

5. பரஸ்பர நலன் சார்ந்த பிராந்திய மற்றும் உலகளாவிய முன்னேற்றங்கள் குறித்தும் இரு தலைவர்களும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

**புது தில்லி**
**ஏப்ரல் 25, 2024**